# முதுசொம் (இலக்கக்) காப்பகம் - வசதி, வாய்ப்பு, இடர்கள்

நா.கண்ணன்
ஜெர்மனி

பல்லாயிரமாண்டு வளமுள்ள தமிழின் பாரம்பரிய கலை-இலக்கிய சொத்து (முதுசொம்) இன்று பாதுகாப்பற்ற (endangered) நிலையில் உள்ளது. தமிழின் பாரம்பரிய சிந்தனைச் செல்வங்கள் பனை ஓலைகளில் எழுதப்பட்டு பராமரிக்கப்பட்டு இதுகாறும் வந்துள்ளன. இலக்கியம் என்பது மட்டுமல்லாது, மருத்துவம், வானவியல், சோதிடம், நாவாய் (கப்பல்) சாத்திரம், கோயில் கட்டுதல் போன்ற பிற அறிவியல்/தொழில் நுட்ப ஆய்வுகளும், அதன் சூத்திரங்களும் பனை ஓலைகளிலேயே காணக்கிடைக்கின்றன. உ.வே.சா, தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் போன்ற பெரியவர்கள் பதிப்பித்தது மேற் சொன்னவையின் ஒரு கூறே! இன்னும் பதிவு காணாதா சாத்திரங்கள் லட்சக் கணக்கிலுள்ளன. அவை பதிப்பைக்காணும் நாள் என்னாள்? அவை பதிவுறுமுன் அழிவதற்கான சாத்தியங்களே அதிகம்.

கால ஓட்டத்தில் மக்கள் கலைகள் பேணுவாரற்று மாற்றமுற்றும் அழிந்தும் வருகின்றன. உதாரணமாக சுப்பிரமணிய பாரதி மேற்கோள் காட்டுவான், வீடுகளிலும், விழாக்காலங் களிலும் பெண்கள் நடைமுறைப் படுத்திய அம்மானை, திருச்சாழல், திருவுந்தியார், திருப்பூவல்லி, அம்மைப்பாட்டு, குயில் பாட்டு போன்ற ஆட்டங்களும், விளையாட்டுக்களும் இன்று வழக்கொழிந்து போயின. இதுபோல், பல்வேறு பாரம்பரியக் கூறுகள் அழியும் முன் ஆவணத்திற்கேனும் (பின்னால் வளர்த்தெடுக்கக் கூடிய வகையில்) பாதுகாக்கப் பட வேண்டும். இது தமிழ் இசைக்கும் பொருந்தும். நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பண்களை, தேவார திருவாசகப் பண்களை அறிந்தோர் நலிவுற்றுவரும் வேளையில் அவைகளின் சாயல்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

கோவில் ஓவியங்கள், மலைக் குகை படுக்கைகளிலுள்ள கல்வெட்டுக்கள், கரிக்கோட்டு ஓவியங்கள் இது போன்ற எளிதில் அழியக் கூடிய கலைப் பொருட்கள் பாதுகாக்கப் பட வேண்டும்.

தமிழனின் மரபு சார்ந்த அறிவு என்ன என உலகு அறியும் முன் அதை அழிய விடுவது நாம் செய்யும் வரலாற்றுப் பிழையன்றோ? தமிழனின் அடையாளம், அவனது பீடு, அவனது எதிர்காலம் இவ்வாணங்களில் உள்ளன என்றால் அது மிகையல்ல.

## வசதி:

தகவல் தொழில் நுட்பம் செய்துவரும் மாற்றம் சரித்திர முக்கியத்துவமானது. இணையம் என்பது ஒரு பொது மன்றம். இம்மன்றத்தில் மானுடம் சார்ந்த அத்துணை தகவல்களும் முதல் முறையாக பொது மக்கள் பார்வைக்கு வந்திருக்கின்றன. இந்த விடுதலைச் சாதனத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் அருங்காட்சியகங்கள், நூலகங்கள், தனியார் களஞ்சியங்கள் போன்றவை கால, வெளி தாண்டி மக்களுடன் ஊடாடக் கூடியனவாக மாறி மரபு என்பது காட்சிப் பொருளென்ற நிலை மாறி வாழும் பொருளாக மாறும். ஊடாடும் தன்மை, பல்லூடகத் தன்மை, திறப்பு, கால-வெளிக் கட்டுப்பாடுகளற்ற தன்மை இவை போன்ற இன்னபிற வசதிகள் இணையத்தில் உண்டு.

ஆறாம் திணை என்னும் மின்வெளித் திணையில் நாம் எழுதும் எழுத்து ஒரே நேரத்தில் ஆயிரக் கணக்கானோர் காணும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறது. இங்கு பிரதி (text) இறவாவரம் பெற்று விடுகிறது. பிரதி என்றும் அழியாமல் எங்கோ ஒரு மூலையில், எங்கோ ஒரு கணினியில் பதிவாகி நிலைத்து விடுகிறது. இப்பிரதியைத் தேடி அழித்தல் என்பது இயலாத காரியம். பாண்டவர்

கண்ட மந்திர மாளிகை போல் பிரதிகள் பிரதிபலிக்கும் தடங்களில் (mirror site) சேமிக்கப் பட்டு நீருக்கு, நெருப்பிற்கு, எதிரியின் இலக்கிற்குத் தப்பி நிலை கொள்கிறது. நிஜ உலகில் நூலகங்கள் எரிக்கப்படலாம். புத்தகங்கள் அழியலாம். ஆயின் நகல்/நிழல் உலகில் நூல்களின் வார்ப்புகள், பதிவுகள் நீரில் அழியாமல், நெருப்பில் அழியாமல் நிலைத்து விடுகின்றன. அதிசயமாக, இலத்திரன் வடிவு கொண்ட நூல்களில் நகல் என்பதே இல்லை. அனைத்துமே முதல் நூல் போல் சீரிளமை கொண்டவையே! எடுக்க, எடுக்கக் குறையாமல் மூலம் 'அட்சய பாத்திரம்' போல் வந்து கொண்டே இருக்கும் தன்மையுடையது.

முதுசொம் இலக்கப்பதிவுகளை காத்து வைக்கும் கிடங்குகள் பாரிய கொள்ளளவு கொண்டவையாக இருத்தல் அவசியம். சிலுக்கான் புரட்சியின் பின் அடர்காந்தத் தகடுகளின் விலை பாரிய அளவில் குறைந்து விட்டது. கணினித் திறன் கூடிக் கொண்டே போகிறது. சேவி (server)கள் வாங்கக் கூடிய விலையிலும், சேவிச் செயலிகள் (உம்.அபாச்சி) இலவசமாகவும் கிடைக்கின்றன.

முதுசொம் இலக்கக் காப்பகமைக்க இது போன்ற வசதி முன் எப்போதும் கிடைத்த தில்லை.

ஏடுகள் என்று மட்டுமல்ல, மறுபதிப்புக் காணா பழைய புத்தகங்கள், பத்திரிக்கைகள், பிற ஆவணங்கள் இம்முறையில் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. மின்வெளி பல்லூடகத் தன்மை வாய்ந்தது. எனவே, ஒலி, ஒளி சார்ந்த ஆவணங்களையும் இம்முறையில் பதிப்பித்து சேமித்து வைக்கலாம். எனவே தமிழின் முதுசொம் காப்பகம் இது. மிகச் சொற்பமான நிதி உதவி கொண்டு இது இன்று ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. கோலாலம்பூரில் நடந்த தமிழ் இணைய மாநாட்டில் (ஆகஸ்ட், 2001) இத்திட்டம் முதன் முறையாக முன் வைக்கப்பட்டு, மலேசிய இந்தியன் காங்கிரஸ்ஸின் தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்களால் இனங்காணப்பட்டு, அமெரிக்க டொலர் 10,000 விதைப் பணமாக பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இக்காப்பகத்தின் ஆவணங்கள் பொது மக்கள் பார்வைக்கு 24 மணி நேரமும் கீழ்காணும் வலைத்தளத்தில் வைக்கப் பட்டுள்ளது:

http://www.infitt.org/thf அல்லது http://www.naa-kannan.net/thf

வாய்ப்பு:

தமிழர்தம் சிந்தனை மரபு எழுத்து வழியில் காலம், காலமாக பாதுகாக்கப்பட்டு வருவது ஒரு வாய்ப்பு. எத்தனையோ மொழிகளுக்கு இந்த வாய்ப்பில்லை. மேலும் பனையோலை என்பது காகிதத்தைவிட வலுவானது, காலத்தை வென்று நிற்கும் தன்மை கொண்டது. 10 வருடங்களுக்குக் கூட தாக்குப்பிடிக்காத புத்தகங்களை நாம் கண்ணுறும் போது 15ம் நூற்றாண்டு ஓலைகள் இன்றும் வாசிக்கக் கூடிய நிலையில் உள்ளன. பனை ஓலையில் எழுதி வைக்க வேண்டுமென்ற தமிழனின் கண்டு பிடிப்பே அடிப்படையில் மெச்சத்தகுந்தது!

இத்தகைய சுவடிகள் பல்லாயிரக் கணக்கில் தமிழ்ச் சமய மடங்களிலும், தனியார் பாதுகாப்பிலும் இன்றும் உள்ளன. உ.வே.சா காலத்தைக் காட்டிலும் மடாதிபதிகள் இப்போது திறந்த பார்வையுடனும், தொழில் நுட்பத்துடன் இசைந்து போகும் மனப் பாங்குடனும் உள்ளனர். உதாரணமாக எனது முதுசொம் பயணத்தில், காஞ்சி மடமும், பேரூர் சைவ மடமும் தங்களது ஓலைச் சுவடிகளை இலக்கப் பதிவாக்க அனுமதி அளித்துள்ளனர். தஞ்சை, ஈரோடு, சென்னை போன்ற பாரம்பரியச் செழுமையுள்ள நகர்களில் வாழும் தனியார் தங்களது ஓலைச் சுவடிகளை முதுசொம் காப்பகத்திற்கு அளிக்க முன் வந்துள்ளனர். மேலும் தனியார் நிறுவனத்திலுள்ள நூலகங்கள், உம். உ.வே.சா நூலகம் சென்னை, ஞானாலயா நூலகம், புதுக்கோட்டை - ஒத்துழைக்க இசைந்துள்ளன.

அது மட்டுமின்றி அண்ணா பல்கலைக் கழகம், சென்னை, இந்திய அறிவியற் கூடம், பெங்களூர், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் போன்ற பொது நிறுவனங்களும் ஒத்துழைக்க இசைந்துள்ளன.

மேலும் உலகத் தமிழ் தொழில் நுட்ப மன்றம் (உத்தமம்), தமிழ் இணையப் பல்கலைக் கழகம் போன்றவையும் தங்களது உதவிக் கரத்தை நீட்டியுள்ளன.

## இடர்களும், எதிர்காலத் திட்டங்களும்:

தமிழ் மரபு சார்ந்த ஆவணங்கள் பெருத்த அளவில் அரசு சார்ந்த நூலகங்களான சரஸ்வதி மகால் நூலகம், சென்னைக் கீழைத்திய சுவடி நூலகம் போன்ற இடங்களில் உள்ளன. அரசு நிறுவனங்களுக்கேயுள்ள மெத்தனமும், சிக்கலான அணுகுமுறைகளும் இந்நூலகங்களில் உள்ள அரிய பொக்கிஷங்களை அணுக முடியாவண்ணம் செய்கின்றன. இவர்கள் தாங்களாகவும் செய்வதில்லை (செய்தால் மிக நிதானமாகச் செய்தல்), செய்பவர்களுக்கும் உதவுவதில்லை என்று கங்கணம் கட்டியுள்ளனர்.

இன்னும் உலகிற்குத் தெரியாத பல்வகையான சுவடிகள் தனியார் இருப்பில் உள்ளன. இவைகளைப் பெறுவதென்பது எளிதான காரியமன்று. இதற்காக முதுசொம் கூட்டமொன்று இதற்கெனப் பயணிக்க வேண்டும். அடுத்து, ஓலைகள் கேட்டவுடன் கிடைப்பதில்லை. எவ்வளவுதான் தகவல் புரட்சி செய்த மாற்றம் பற்றிப் பேசினாலும், தகவல் என்பது விலை போகும் விஷயமாகவே உள்ளது! எனவே பேரம் பேசும் வல்லுநர்களும் தேவை. பெரும்பாலோர் தங்களது சுவடிகளைப் பகிர்ந்து கொள்ள விழைவதில்லை. இம்மாதிரி சமயங்களில் அச்சுவடிகளை அவ்விடத்தில் வைத்தே இலக்கப் பதிவாக்கல் சிறந்தது. அப்படியெனில் தொழில் நுட்பம் தெரிந்த நபர்களுடன், நடமாடும் இலக்கப்பதிவு வாகனமொன்றை உருவாக்க வேண்டும். அல்லது, தமிழகம் போன்ற மாநிலத்தில் பல்வேறு இலக்கப் பதிவு மையங்களை உருவாக்கி அங்கிருந்து செயல்பட வேண்டும்.

தமிழ் சார்ந்த முதுசொம் என்பது கட்டாயம் தமிழ் பேசும் நாடுகளில் மட்டும் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. எத்தனையோ ஏடுகள், நூல்கள், செப்பேடுகள், கல்வெட்டுகள் ஐரோப்பிய நூலகங்களில், தனியார் கைவசம் இருக்கின்றன. இவைகள் ஒப்பீட்டளவில் பாதுகாப்புடன் இருந்தாலும், இவையும் தமிழ் மக்கள் பார்வைக்கு வரவேண்டியவையே. இவைகளை வெவ்வேறு ஐரோப்பிய அரசாங்கங்களுடன் இணக்கமாகிப் பேசி இலக்கப் பதிவாக்க வேண்டும். பல்வேறு இடங்களில் ஏற்கனவே இலக்கப்பதிவாக்கல் நடந்து கொண்டுள்ளது. அவ்வாறெனில் அவைகளை அவர்கள் சொல்லும் விலைக்கு வாங்கிக் கொண்டு தமிழ்க் காப்பகத்தில் வைக்க வேண்டும்.

முதுசொம் காப்பகமென்பது தனியார் ஆர்வத்தில் உருவாக்கப்பட்டிருப்பினும் அதுவொரு ஆயிரங்காலத்துப் பயிராகும். அதுவொரு நிறுவனமாக வளர்ந்தால்தான் எடுத்துக்கொண்ட இலக்கை குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் முடிக்க முடியும். இந்நிறுவனம் கொள்கையளவில் அரசு சாராமலும், ஈட்டு நோக்கற்றும், அரசியல் நடுவுத் தன்மை கொண்டதாகவும் சர்வ தேச முகம் கொண்டும், சர்வ தேச தொழில் நுட்பத்தை உள்வாங்கிக் கொள்ளும் திறனுடனும், செய்லாற்றலுடனும் இருக்க வேண்டும்.

இத்துணை சாத்தியங்கள் கொண்ட முதுசொம் காப்பகத்தின் எதிர்காலம் என்பது அது பொது மக்களிடமிருந்தும், பல்வேறு அரசாங்களிடமிருந்தும், பொது/தனியார் நிதி நிறுவனங்களிலிருந்தும் பெறும் நிதியைப் பொறுத்தே அமைகிறது. தொண்டூழியத்தில் ஆரம்பிக்கப் பட்டிருப்பினும் இது திறமையாக செயல்பட முழு நேர சிப்பந்திகள் தேவை. இதற்கென ஒரு அலுவலகமும், உலகு தழுவிய கிளைகளும் மிக அவசியம்.

தமிழர் அறிந்த அரசுசாரா நிறுவனங்கள், தமிழர்கள் முன்னெடுத்து நடத்தும் அரசாங்கத் துறைகள் போன்றவை முதுசொம் காப்பகம் அமைய நேசக்கரம் நீட்ட வேண்டும். ஊர் கூடி இழுத்தால்தான் தேர் நிலை கொள்ளும் என்பது பழமொழி. தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டோர், தமிழ் அடையாளத்தை உயிர் போல் பேணுவோர், தமிழ் அடையாளத்தால் அரசியல் நடத்துவோர், மரபு மீது பற்றுக் கொண்டோர் எல்லோரும் முதுசொம் காப்பகம் அமைய பொருளுதவி, செயலுதவி, கால உதவி, சிந்தனை உதவி செய்ய வேண்டும். செய்தால் பாரதி கண்ட கனவு நனவாகும். அதுவே,

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

*****************